# இலக்கியப் பூங்கா

பதிப்பாசிரியர்:

**முனைவர் ச.முத்துவேல்**

தமிழ்த்துறைத் தலைவர்
என்.ஜி.எம்.கல்லூரி,
பொள்ளாச்சி.



Language: Tamil

**Ilakkiya Poonga**

Editor: **Dr. S. Muthuvel**

**Tamil Department**

**N.G.M. College, Pollachi**

First Edition: November, 2018

Copyright: Publisher

No.of Pages: 100

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 098.

Tamilnadu State, India.

Email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN. 978 - 81 - 2343 - 816 - 0

Code No. A 4041

**₹ 75.00**

**Branches**

**Ambattur (H.O.)** 044 - 26359906 **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452 2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 0434-3234387 **Ooty** 0423 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Thiruvannamalai** 04175-223449

**இலக்கியப் பூங்கா**

பதிப்பாசிரியர்: **முனைவர் ச.முத்துவேல்**

**தமிழ்த்துறைத் தலைவர்**

**என்.ஜி.எம். கல்லூரி. பொள்ளாச்சி**

முதல் பதிப்பு: நவம்பர், 2018

அச்சிட்டோர்: **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

☎: 044-28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

# பொருளடக்கம்

1. பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் மானுட வாழ்வியல்

- முனைவர் பொ.மா. பழனிசாமி 7

2. அரசியற் சுதந்திரமும், இலங்கையின் கல்வி வளர்ச்சியும்

- திலானி 15

3. சங்க இலக்கியத்தில் தொழில்முறைகள்

- முனைவர். இரா. விஷ்ணுப்பிரியா 25

4. கவிதை வடிக்கும் கவிதைகள்

- முனைவர் ப. வடிவேல் 34

5. உலகநாதன் ஓதுவித்த வாசகம்

- முனைவர் க. தனலட்சுமி 45

6. சிலப்பதிகாரத்தில் செவ்வியல் பண்புகள்

- முனைவர் ம. சித்ரகலா 51

7. சேக்கிழாரின் பெயர் சுட்டாப் பெண்கள்

- முனைவர் ஆ. மகாலட்சுமி 63

8. தூது செல்லாயோ கிளியே!

- முனைவர் பே. மகேஸ்வரி 70

9. நாட்டுப்புறவியலில் தொழில்சார் கலைகள்

- பேரா. ர. சூர்யா 82

10. கவிஞர் சிற்பியின் 'தும்பைப் பூ மனிதர்கள்'

- முனைவர் க. நஞ்சையன் 93

# 6. சிலப்பதிகாரத்தில் செவ்வியல் பண்புகள்

- முனைவர் ம. சித்ரகலா

இலக்கியம் என்பது சமுதாய சூழலைப் படம் பிடித்துக் காட்டும் கற்பனை கலந்த வரலாற்றுப் பெட்டகம் எனலாம். காலந்தோறும் சமுதாயச் சூழலில் மலர்ந்த இலக்கியங்கள் பலவிதமான சுவைகளையும், கதைகளையும், வாழ்க்கை அனுபவங்களையும், பலவிதமான சிக்கல் களையும் அதற்கான தீர்வுகளையும், இயற்கைச் சூழலையும் நயம்பட எடுத்தியம்புகின்றன. அவ்விலக்கியங்களைப் பயில்வோர் பாலையும் நீரையும் கலந்து வைத்தால் பாலை மட்டும் பருகும் அன்னப் பறவை போல நல்லதை மட்டும் உள்வாங்கிச் செயல்பட்டால் வாழ்வு செழிக்கும். அதோடு தீமையை இனம் காணும் ஆற்றலும், அதனை சீர்படுத்தும் மதிநுட்பமும் வேண்டும். "எது நினைக்கிறோமோ அதுவாகவே ஆகிறோம்" என்கிறது பகவத்கீதை. ஆக மனிதன் சொல், செயல், சிந்தனை ஆகியவை தூய்மையானதாக, ஏற்றமுடையதாக அமைந்தால் வாழ்வும் ஏற்றமுடையதாகச் செழிப்படையும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய செவ்வியல் இலக்கியமான சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் வடிவமைத்தார். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பண்டைய மரபு, மொழி ஆளுமை சமுதாய சிறப்பு, நாட்டு ஒற்றுமை, பழங்குடியினரின் வீரம், படிக்காத பாமர மக்களின் பண்பாடு, பழக்க வழக்கம், இசை நுணுக்கம், நாட்டியச் சிறப்பு, நாடகப் பாங்கு, இலக்கியத்தைச் சுவை படக் கொண்டு செல்லும் கிளைக்கதைகள் இயற்கையோடு இயைந்த மனித வாழ்வு, மக்களின் உயர் பண்புகள் போன்ற பல செவ்வியல் பண்புகள் நிறைந்த காப்பியமாக சிலப்பதிகாரம் திகழ்கின்றது. அச்சிறப்புமிக்க செவ்வியல் பண்புகளில் ஒரு சில செவ்வியல் பண்புகளை மட்டும் கட்டுரையின் எல்லை கருதி இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

## செவ்வியல் பண்பு

செவ்வியல் என்பதன் மூலச்சொல் செம்மை என்பதாகும். உயர் தனி இலக்கியங்களைச் (Classical literature) சுட்டுவதற்கு செவ்வியல் என்ற "கிளாசிக்கல், கிளாசிசம்" போன்ற சொற்களுக்கு இணையாகக் கையாண்டு உள்ளனர். உலக செம்மொழிகளில் தமிழ்மொழி சிறந்த மொழியாக சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. தமிழ் மொழியில்

செவ்வியல் இலக்கியங்களாக அறிவிக்கப்பட்டவை 41 நூல்கள் ஆகும். அவை, தொல்காப்பியம் - 1, இறையனார் களவியலுரை 1, பதினெண் மேல் கணக்கு நூல்கள் - 18, பதினெண் கீழ் கணக்கு - 18, சிலம்பு, மணிமேகலை - 2, முத்தொள்ளாயிரம் - 1 ஆகியவையாகும். இவற்றில் சிலம்பின் செவ்வியல் பண்புகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சிலப்பதிகாரம்

சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம். சிலம்பை மையமாக கொண்டு இளங்கோவடிகள் இக்காப்பியத்தைப் படைத்தாலும் இக்காப்பியம் சமுதாய சூழலுக்கும் மக்கள் உணர்வுகளுக்கும் மதிப்புக் கொடுப்பதாக அமைந்துள்ளது. இளங்கோவடிகள் சேர நாட்டைச் சேர்ந்தவராக இருப்பினும், இக்காப்பியத்தில் சேர, சோழ, பாண்டியர் மூவரையும் புகழுடையவராக, நீதி வழுவாதவராக, பண்புடையவராக உயர்த்திக்காட்டி இக்காப்பியத்தை ஒற்றுமை காப்பியமாக வடித்துள்ளார். இக்காப்பியத்தில் வரும் கதை மாந்தர்களும் நெஞ்சில் நிறைந்திருப்பவர்களாக உயர்ந்த பண்பு நலன் உடையவராக இருப்பது இக்காப்பியத்தை மேலும் பெருமைப்படுத்துகின்றது எனலாம். மூவேந்தர்களின் ஆட்சி சிறப்பும், மக்கள் நலனின் கொண்ட அக்கறையும் இன்றும் மதிப்பூட்டும் வகையில் அமைந்துள்ளது. இச்சிறப்பு இளங்கோவடிகளின் சமுதாயப்பற்றை வெளிப்படுத்து கின்றது.

## நாட்டு வளம்

நிலவளம், நீர்வளம், தாவர வளம், மக்கள் வளம் ஆகியவை சிறந்து இருக்கும் நாடும் அரசும், ஆட்சியும் சிறப்புடையதாக விளங்கும். இவ்வளங்கள் அனைத்தும் சேர, சோழ, பாண்டிய நாட்டில் செழித்து இருப்பதைச் சிலம்பு விரிவுபடுத்துகிறது. இளங்கோவடிகள் நாட்டு எல்லையைக் குறிப்பிடும்போது,

> ''நெடியோன் குன்றமும் தொடியோன் பௌவமும்
> தமிழ்வரம்பு அறுத்த தண்புனல் நன்னாட்டு'' (சிலம்பு 8: 1 - 2)

என்றும்

> ''குமரி வேங்கடம் குணகுட கடலா
> மண்டிணி மருங்கின் தண்டமிழ் வரைப்பின்'' (வஞ்சிக்கா. நூற்கட். 1 - 2)

என்றும் இயற்கையில் அமைந்த நான்கு புவியியல் எல்லைகளைக் குறிப்பிடுகின்றார். நாட்டு எல்லை என்றதும் இளங்கோவடிகள் சேர சோழ, பாண்டியரின் எல்லைகளைக் கூறாது, தமிழகத்தின் எல்லையை

புரட்சியும் உடையது எனலாம். திட்டவட்டமாக அந்தந்த நாடுகளை வரையறை செய்தது தமிழக ஒற்றுமைக்கு வித்திட்ட ஒரு புதுமையும் கூறும் போது,

"வயலும் சோலையும் அல்லது யாங்கணும்
அயல்படக் கிடந்த நெறியாங்கு இல்லை" (சில. 10: 94 - 95)

என்பதால் சோழ நாட்டு வளமும்,

"புறம் சிறைப் பொழிலும் பிறங்குநீர் பண்ணையும்
இறங்குகதிர்க் கழனியும் புள்ளெழுந்து ஆர்ப்ப" (சில. 14. 1 - 2)

என்று பாண்டிய நாட்டு வளமும்

"தொடுப்பேர் உழவர் ஓதைப் பாணியும்" (சில. 27. 230)

என்று சோழ நாட்டு வளமும் தெரிய வருகின்றன. நாட்டு வளத்தோடு நகர்வளமும் சிறந்து இருப்பதை,

"மாட மதுரையும், பீடார் உறந்தையும்
கலிகெழு வஞ்சியும், ஒலிபுனல் புகாரும்
அரைசு வீற்றிருந்த உரைசால் சிறப்பின்" (சில. 8. 3 - 5)

என்ற பாடலும் தாவர வளம் சிறந்து விளங்குவதை,

"குரவமும், வகுளமும், கோங்கமும், வேங்கையும்
மரவமும் நாகமும் திலகமும் மருதமும்
சேடலும் செருந்தியும் செண்பக ஓங்கலும்
பாடலம் தன்னோடு பன்மலர் விரிந்து" (13. 151 - 154)

என்ற வரிகளும் எடுத்தியம்பி நிற்கின்றன.

"நீரின்றி அமையாது உலகு" என்ற வரிகளுக்கு ஏற்ப நீர்வளத்தை குறிப்பிடும்போது "திருமாலின் மார்பில் விளங்கும் ஆரம்போல உயர்ந்த மலையின் நடுவே பேரியாறு ஓடியது. அதனைச் செங்குட்டுவனும் மற்றவரும் கண்டு களித்தனர்" என்பதை (சில. 25: 21 - 22) பாடல் விளக்கி நிற்கின்றது. மேலும் சோழ நாட்டு வளத்தைக் குறிப்பிடும்போது, காவிரி மக்களுக்குத் தாயாகவும், சோழனுக்குக் கற்பு நிறைந்த காதல் மனைவியாகவும் உவமைப்படுத்திப் பாடியிருப்பது இளங்கோவடிகளின் கவித்திறனை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதனை,

"பரப்பு நீர்க் காவிரிப்பாவைதன் புதல்வர்" (சில. 10. 148)

"புலவாய் வாழி காவிரி" (சில. 7 - 2)

என்றும் குறிப்பிடுகின்றது. அக்காலத்தில் தமிழ்நாட்டில் மாதம் மும்மாரி பெய்தது. ஒரு வேளை மழை பெய்யவில்லை என்றாலும் கரு

மேகங்களைச் சிறைபிடித்து வந்து மழை பெய்யச் செய்தவர்கள் பாண்டியர்கள் என்பதை,

"பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன் வாழ்க" (சில. 11. 28 - 29)

என்பதால் அறியமுடிகின்றது. தமிழ்நாடு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானில வளங்களை உடையது. தமிழ்நாட்டில் பாலை நிலம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நானில மக்களும் அந்தந்த நிலத்திற்கு ஏற்ப தொழிலைச் செய்து சிறப்பாக வாழ்ந்தனர் என்பதை இளங்கோவடிகள் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளதை நோக்கும் போது ஒரு நாடும் அரசும் செழிப்புடன் இருக்க வேண்டும் என்ற இளங்கோவின் செம்மையான எண்ணம் இங்கு பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## காவலுடன் கூடிய இலட்சிய அரசு

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (குறள். 388)

என்கிறது வள்ளுவம். ஒரு நாட்டின் ஆட்சி நலமாக இருந்தால் அந்நாட்டு மக்கள் நலமுடன் வளமாக வாழ்வர். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் ஒரு இலட்சிய அரசை வேண்டியிருக்கிறார். மக்கள் நலனே நாட்டின் நலம் என்பதை மனதில் கொண்டு நாட்டின் அடிப்படைத் தேவையை இந்திர விழாவின்போது மக்கள் வேண்டுவதாக,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் காக்க" (சிலம்பு: 5. 72 - 73)

என்றும்

"திருமகள் புகுந்ததுஇச் செழும்பதி" (சில. 5. 213)

என்றும் குறிப்பிடுவது நாட்டின் செல்வச் செழிப்பையும், வளத்தையும், ஆட்சி சிறப்பையும் வெளிப்படுத்துகின்றது.

இளங்கோவடிகள் ஒரு நாட்டின் மண் வளத்தைவிட மக்கள் வளம் மிகவும் இன்றியமையாதது என கருதினார். மக்கள் உடலாலும் உள்ளத்தாலும் நலமுடன் திகழ வேண்டும். மக்கள் அனைவரும் கல்வி, ஒழுக்கம், பண்பாடு, நீதி, அறம் போன்ற உயர்ந்த அறவாழ்க்கை வாழ வழிகாட்ட வேண்டும் என விரும்பினார். "உயரிய நோக்கங்களும், செய்கைகளும் கொண்ட வாழ்க்கையைத் தனது மக்களிடம் தோற்று விக்காத வரையில் ஓர் அரசியல் அமைப்பு தனது பணியைச் செவ்வனே செய்து விட்டதாகக் கூறிக் கொள்ள முடியாது (சிந்தனையாளர் அரிஸ்டாட்டில் ப. 111) என்கிறார் அரிஸ்டாட்டில்.

மக்களின் எதிர்கால நலன் கருதி நலம் பயக்கும் வகையில் சமூக நலதிட்டங்களை ஐவகை மன்றங்கள் அமைத்து, அம்மன்றங்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். அவை,

## 1. வெள்ளிடை மன்றம்

புகார் நகரில் வெட்ட வெளியில் ஒரு பொது இடத்தில் ஒரு மண்டபம் உண்டு. அதற்கு வெள்ளிடை மன்றம் என்று பெயர். இம்மண்டபத்தில் எவர் வேண்டுமானாலும் தம் பெயர், தம் பொருள், எண்ணிக்கை ஆகியவற்றைக் குறிப்பிட்டு தங்களுடைய பொருளை வைத்துச் செல்லலாம். ஓய்வெடுக்கலாம், எப்போது வேண்டுமானாலும் தம்பொருளை எடுத்துச் செல்லலாம். ஏனென்றால் இம்மண்டபத்திற்கு கதவும் இல்லை. பூட்டும் இல்லை. காவலரும் இல்லை. பொருள் எதுவும் களவு போவதும் இல்லை.

"கள்வர் இலாமையால் பொருள் காவலுமில்லை" (கம்ப. பால. நகர. பா. 166)

என்று கம்பன் அயோத்தி நாட்டிற்குச் சொன்ன சிறப்பைப் போல இங்கு வெள்ளிடை மன்றம் திகழ்கிறது. புகார் நகர மக்கள் செல்வந்தராக இருப்பதால் களவு செய்ய அவசியமில்லை. வெளியூரி லிருந்து வருபவர் எவரேனும் தவறு செய்தால் இம்மன்றத்தில் இருக்கும் பூதம் இவர்களை தண்டிப்பதோடு களவாடிய பொருள்களைக் களவாடியவர் முதுகில் வைத்து ஊரைச் சுற்றிவரச் செய்து பல கொடுமைகள் புரியுமாம். ஆக இங்கு களவு என்பது இல்லாமல் இருந்ததை,

"கடைமுக வாயினும் கருந்தாழ்க் காவலும்
உடையோர் காவலும் ஓரீஇய" (5. 113 - 114)

என்ற வரிகள் இம்மன்றத்தின் சிறப்பைப் புலப்படுத்தி நிற்கின்றது. இன்றோ, நம்மை நாமே எப்போது தொலைத்து விடுவோம் என்ற உத்திரவாதம் இல்லாத நிலையில் நாடு திகழ்வதை எண்ணுதலும் விழிப்புணர்வு கொள்ளுதலும் அவசியமாகிறது.

## இலஞ்சி மன்றம்

பொய்கையுடன் கூடிய மண்டபம் இலஞ்சி மன்றம் - சிலர் பிறக்கும் போது கை, கால் ஊனமுற்று, உடல் ஊனமுற்று, வாய் பேச முடியாமல், பார்வையற்று, காது கேளாமல், அறிவு தெளிவின்றி இருத்தல் போன்ற குறைபாடு உடையவர்கள் இருப்பர். இவ்வாறு குறைபாடு உடையவர்கள் இம்மன்றத்தில் நாளும் நீராடி, அம்மன்றத்தை வலம் வர அனைத்து பிறவிக் குறைபாடுகளும் பிணிகளும் நீங்கி நிறைவு பெற்று வாழ்வர் என்பதனை (சிலம்பு 5. 118 - 121) பாடலால்

அறிய முடியும். உயிரினப் பிறப்புகளில் அரிய பிறப்பு மானுடப் பிறப்பு அதிலும்,

> "மூங்கையும், செவிடும், கூனும் குருடும்
> பேரும் நீங்கிப் பிறத்தல் அரிது" (அவ்வை த.பா. தி.பா. 58)

என ஔவையார் பாடியுள்ளார். இத்தகு அரிய பிறப்பான மானுடப் பிறப்பில் உடல் குறைபாடு உடையவர்களைச் சமுதாயம் எள்ளி நகையாடக் கூடாது என்பதற்காக ஒரு போக்கிடத்தையும் காட்டி யுள்ளார் இளங்கோ. இன்றும் குற்றால அருவியில் குளித்தால் தீராத நோயெல்லாம் தீரும் என்று அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். அதோடு கங்கையில் நீராடுவதும் புனித தலங்களுக்குச் சென்று ஆற்றங்கரையில் புனித நீராடுவதும் பாவங்களைப் போக்குவதோடு நோயும் தீரும் என்று இன்றும் நம்பப்படுகிறது. அக்காலத்திலேயே இப்படி ஒரு மன்றம் வைத்த இளங்கோவின் சமுதாயப் புரட்சி போற்றத்தக்கது.

## நெடுங்கல் மன்றம்

ஒளி வீசும் உயரமான கல் ஒன்று தூணாக நிறுத்தப்பட்டு கட்டப் பட்ட மண்டபம் நெடுங்கல் மன்றம் எனப்படும். வஞ்சனையால், பிறர் இட்ட உணவால், மருந்தால் பித்துப்பிடித்தவர், வாழ்க்கை வெறுப்புற்று நஞ்சை உண்டவர், பாம்பு, தேள் போன்றவை கடித்து விடம் ஏறியவர், பேய் பிடித்தவர் ஆகியோர் ஒளிவீசும் நெடுங்கல் தூணை வலம் வந்தால் முன் சொன்ன விடங்களிலிருந்து பிழைக்கலாம் என்று (சிலம்பு 5 - 125 - 127) பாடல் வரிகள் விளக்கி நிற்கின்றன. இவ்வாறு இளங்கோவடிகள் நம் காவியத்தில் மக்களுக்கு இயற்கையாகவோ செயற்கையாகவோ குறை ஏற்பட்டால் அதை நிவர்த்தி செய்தல் அரசின் கடமை என உணர்த்தி செயல்பட்டுள்ளார். தற்போது திருவண்ணாமலையை கிரி வலம் வருதல் நோய் தீர்க்கும் என்றும் பேய் பிடித்தவர்கள் கேரளாவில் உள்ள சோற்றானிக்கரை பகவதி அம்மன் சன்னதியில் உள்ள ஆணி அடித்த மரத்தைப் பார்த்து வழிபட்டு அங்குள்ள நீர் நிலையில் நீராடினால் நன்மை நடக்கும் என்றும் செல்கின்றனர் என்றால் அன்று இந்நெடுங்கல் பிணி தீர்த்தது என்பதை நம்புவதற்கு இடமுண்டு எனலாம்.

## பூதசதுக்க மன்றம்

மருதூர்ப் பாக்கத்திற்கும் பட்டினப்பாக்கத்திற்கும் இடையே நான்கு சாலைகள் கூடும் இடத்தில் சதுக்கம் உள்ளது. அச்சதுக்கத்தில் பூதம் ஒன்று இருப்பதால் அச்சதுக்கத்தை பூதம் சதுக்கம் என்று அழைக்கப்பட்டது. தவவேடத்தில் மறைந்தொழுகுவோர், போலித்

துறவியர், கற்பு நெறி தவறிய பெண்டிர், தன் அரசனுக்கு கேடு செய்யு அமைச்சர், பிறர் மனைவியை விரும்புவோர், பொய் சாட்சி கூறுவோர், புறங்கூறுவோர் ஆகியோரை அங்கு உள்ள பூதம் தன் குரல் கேட்குமாறு ஒலி எழுப்பி, நிலத்தில் அவரை அடித்து உண்ணும். இப்பூதம் புகார் நகரத்தில் எவ்வகை குற்றமும் நிகழாவண்ணம் காத்து வந்தது என்பதை (சில. 5.128 - 134) வரிகள் உறுதி செய்கின்றன. இம்மன்றத்தால் மக்கள் குற்றம் செய்யாது இருக்க வழிவகை செய்தார் இளங்கோ. இன்றும் இந்நிலையில் அரசு செயல்பட்டால் போற்றத்தக்கது.

கற்பு என்பது ஆண், பெண் இருவருக்கும் பொது என்பதையும், நாட்டில் உள்ளோர் அனைவரும் ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். அப்போதுதான் நல்லரசு நிலவும் என்பது இளங்கோவின் உயர் சிந்தனை எனலாம். பொய் சாட்சி சொன்ன ஒருவனைப் பூதம் புடைத்து உண்ண முற்பட்டபோது அவனது தாய், சுற்றுத்தார் ஆகியோர் கதறி அழுததைக் கேட்ட கோவலன் அவன் உயிருக்குப் பதிலாக என் உயிரைத் தருகிறேன். அவனை விட்டு விடு என்றான். அதற்கு அப்பூதம்,

> "நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
> பரகதி இழக்கும் பண்பீங்கு இல்லை"
> (15. 84 - 85)

என்று கூறிவிட்டு பொய்சாட்சி கூறியவனை கொன்றுவிட்டது. நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பது இளங்கோவடிகளின் உயர்ந்த எண்ணமாக இருப்பதை உணர முடிகின்றது.

### பாவை மன்றம்

மக்கள் பலரும் கூடுமிடத்தில் அழகிய பாவை நிற்கும் மன்றம் ஒன்று உண்டு. அரசனது செங்கோல் சிறிது தவறினாலும், தர்மம் உரைப்போர் வழக்குரைக்கும் அவையத்தில் அவர் உரைக்கும் உரை நேர்மை திரிந்தாலும், அப்பாவை நாவால் கூறாமல் துன்பத் கண்ணீர்விட்டு அழுது நிற்கும் இதனை,

> "நாவொடு நவிலாது நவைநீர் உகுத்துப்
> பாவை நின்று அழூஉம் பாவை மன்றம்"
> (சிலம்பு. 5. 137 - 138)

என்ற வரிகள் கூறி நிற்கின்றன. அரசன், நீதி வழங்குவோர் தவறு செய்யாமல் இருக்கும் பொருட்டு இப்பாவை மன்றம் அமைக்கப் பட்டது. சோழ நாட்டில் உள்ள மன்ற பாவை அழுததே இல்லை. அந்த அளவிற்கு நீதி சிறப்புற அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை எனலாம். இன்றைய சமுதாயத்தில் இப்படி ஒரு பாவை மன்றத்தை

அமைத்தால் அப்பாவை அழுமா? அழாமல் இருக்குமா? அழுது கொண்டே இருந்தாலும் அதனைக் கண்டு திருந்துவோர் உண்டா? என்பது சிந்தனைக்குரியதே எனலாம்.

## கிளைக் கதைகள்

பண்டு தொட்டு இன்று வரை மக்களையும், குழந்தைகளையும் மாணவர்களையும் நல்வழிப்படுத்த பலவிதமான நல்வழிக்கதைகளைக் (Moral Stories) கூறுதல் இயல்பு. அக்காலத்தில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தனர். தாத்தாவும் பாட்டியும் தங்கள் பேரக் குழந்தைகளுக்குப் பல குட்டிக் கதைகளைக் கூறுவர். அக்கதைகளில் பொய் சொல்லாமல் இருத்தல், திருட்டு, பொறாமை குணம் இல்லாமை, பிறர் பொருளை நயவாமை, விட்டுக் கொடுத்தல், கோபம் கொள்ளாதிருத்தல், பொறுமை அவசியம் வேண்டும் என உணர்த்துதல், தர்மம் செய்தல், நம்பிக்கை துரோகம் செய்யாதிருத்தல் போன்ற வாழ்வு நலம் தரும் பயனுள்ள பல நீதிக் கதைகளைக் குழந்தைகளின் மனதில் பசுமரத் தாணி போல் பதிய வைப்பர். இதுபோலவே இலக்கியங்களைப் பயில்வோரை நல்வழிப்படுத்தவும், இலக்கியத்தைப் பயிலும்போது சலிப்புத்தட்டாமல் இருக்கவும் இலக்கியங்களில் கிளைக் கதைகள் இடம் பெறுகின்றன.

தமிழில் மணிமேகலை, சீவக சிந்தாமணி போன்ற காப்பியங் களிலும் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் ஏராளமான கிளைக்கதைகளைக் காணலாம். புகழ்பெற்ற கிரேக்கக் கவிஞர் ஹோமரின் இலியட் ஒடிசியிலும், ஆங்கிலப் பெரும்புலவர் மில்டனின் இழந்த சொர்க்கத்திலும் (Paradise Lost) பல கிளைக்கதைகள் இடம்பெற்றுள்ளன. கிளைக்கதைகளை வடமொழியில் உபாக்கி யானங்கள் என்று சொல்வர். சிலப்பதிகாரத்தில் இருபதிற்கும் மேற்பட்ட கிளைக்கதைகள் மட்டுமின்றி, புறாவிற்காக தன்னையே கொடுத்த சிபி சக்கரவர்த்தி, மனுநீதி சோழன், தொடித்தோள் செம்பியன் மகாபாரதப் போரில் பெருஞ்சோறு அளித்த பெருஞ்சோற்று உதியஞ்சேரல் போன்றோர்களின் சிறப்புக்களையும் எடுத்தியம்பும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. சிலப்பதிகார நாயகன் கோவலன் திருமாவளவன் கதையையும் (சில. 5. 84 - 94) மாலதி கதையையும் (சில. 9 - 4 - 28) குறிப்பிடுகின்றார். மேலும் கற்பனை மாந்தர்களான விஞ்சய வீரன் இரு கதைகளும், மதுராபதி தெய்வம் கண்ணகியிடம் மூன்று கதைகளையும் கூறுகின்றது. கதை மாந்தர்களும் பல கிளைக் கதைகளைச் சிலம்பில் குறிப்பிடுகின்றனர். அவற்றில் மாடலன் கூறிய மூன்று கதையில் மணிமேகலா தெய்வம் பற்றிய கதை இங்கு குறிப்பிடப் படுகிறது.

கோவலன் குல முன்னோன் ஒருவன் கடலிலே செல்லும்போது நள்ளிரவிலே அவனுடைய மரக்கலம் உடைந்துவிட்டது. அவன் முற்பிறப்பிலே புண்ணியமும் தானமும் செய்தவன். ஆதலால் ஆபத்தின்றிச் சில நாள் கடலிலேயே நீந்திக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு தெய்வம் அவன்முன் தோன்றிற்று, "நான் இத்தீவில் உள்ளவர்களை அரக்கர்கள் துன்புறுத்தாமல் இந்திரன் ஏவலின்படி பாதுகாத்து வருகிறேன். உன் துன்பத்தைக் கண்டேன். அதை ஒழிப்ப தற்காக வந்தேன். இனி நீ அஞ்ச வேண்டாம். என் பெயர் மணிமேகலை. நீ முன்செய்த தானத்தால் உண்டான புண்ணியமும், உன்னை விட்டு ஒழியவில்லை. ஆதலால் நீ இத்துன்பத்திலிருந்து விடுதலை பெறுக, இக்கடலிலிருந்து கரை ஏறுக" என்று சொல்லி அவன் துன்பத்தைத் தீர்த்தது. அவனைத் தன் மந்திர சக்தியால் ஒரு திடலிலே கரையேறச் செய்து காப்பாற்றியது. அன்று முதல் வந்த மேகலா தெய்வமே கோவலன் குலதெய்வம் ஆயிற்று. இப்பெயரே மாதவியின் குழந்தைக்கு வைக்கப்பட்டது (சிலம்பு: 10. 21 - 53) என்பதை அறிய முடிகின்றது. ஆக "தர்மம் தலை காக்கும்" என்பதுபோல நம்மை காக்கும் என்ற நீதியை உரைக்கும் கதையாக இளங்கோவடிகள் படைத்துள்ளார். ஆக இளங்கோ மக்களை நல்வழிப்படுத்த ஒரு நீதி போதகனாகவும் செயல்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### புராணம்

புராணம் என்பதற்கு பழமை, தொன்மை, பழங்கதை என்ற பொருளைத் திருமகள் அகராதி குறிப்பிடுகின்றது. இதனைத் தொல்காப்பியர்,

"தொன்மை தானே
உரையோடு புணர்ந்த பழமை மேற்றே" (தொல். செல். 237)

என்கிறார். "சமயம் அல்லது தெய்வத் தொடர்பாகவோ, உலகில் நடந்திருக்கக் கூடாத கற்பனைக் கதை போன்ற ஒன்றினைப் புராணம் என்று கூறுவது உண்டு. இதனை இறை இயல்பு பழங்கதை என்றும் குறிப்பிடுவதை (சிலம்பில் புராணக் கதைகள். 105) அறிய முடிகின்றது. இவ்வியல்புடைய புராணச் செய்திகளை இளங்கோ சிலப்பதிகாரத்தில் பரவலாக கையாண்டுள்ளார். அழகிலும், ஆற்றலிலும் கோவலன் முருகனை ஒத்திருப்பதை,

"பண்தேய்ந்த மொழியினா ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செய்வேல்" (சிலம்பு. 1. 32 - 33)

என்றும் கண்ணகி அருந்ததியை ஒத்திருப்பதை,

"தீதிலா வடமீனின் திறமிவள் திறம்" (சிலம்பு. 1 - 27)

என்றும் குறிப்பிடுகின்றார். சேர, சோழ, பாண்டிய மன்னர்களைக் குறிப்பிடும்போது பாண்டியர் குல முதல்வன் சந்திரன் ( சில. 4. 21 - 24) என்றும் "திங்கட் செல்வன் திருக்குலம்" (சிலப். 11. 23- 25) என்றும் சோழனையும் இளங்கோ குறிப்பிடுகின்றார். மேலும் திருமாலின் அவதாரச் செயல்கள் பல சிலம்பில் இடம் பெற்றுள்ளன. அதோடு கொற்றவை பற்றிய செய்திகளும் புராண மரபுச் செய்திகளாக இடம் பெற்றுள்ளன. முருகனின் செயல்கள் பல இடங்களில் பேசப்படு கின்றது. சிவபெருமான் ஆடிய இருவகை கூத்துக்களான கொடு கொட்டி ஆடல் (6: 39 - 43) (25. 67 - 75) என்ற பாடல் வரிகளிலும், பாண்டரங்கக் கூத்து (6. 44 - 45) என பாடல் வரியில் இடம் பெற்றுள்ளது. ஆக திருமால், முருகன், கொற்றவை, சிவன் பற்றிய செய்திகள் காப்பிய கதையோடு தொடர்பு பெறாமல் அக்காலச் சமயச்சூழலை விளக்கும் மூலமாக அமைந்து விளங்குவதால் இளங்கோ சமுதாயச் சூழலில் அமைந்திருக்கும் சமய சூழலுக்கும் மதிப்பு கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

## நாட்டுப்புற மரபு

இளங்கோவடிகள் தம் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த நாட்டுப்புற மக்களின் பண்பாடு, பழக்கவழக்கம், நம்பிக்கை போன்றவற்றை தம் இலக்கிய படைப்பில் புகுத்திச் சிறப்பித்துள்ளார். நாட்டுப்புற இலக்கியத்தை அப்படியே புகுத்ததால் கவித்துவத்துடனும் கலை சிறப்புடனும் படைத்துள்ளார். நாட்டுப்புறப் பாடல்களில் ஒரு வரியோ, சொல்லோ, சொற்றொடரோ திரும்பத் திரும்ப வரும். இது இசையோடு கூடி வருவதால் கேட்பவர்களுக்கு இன்பம் நல்குவதோடு பாடலை நினைவு வைத்துக் கொள்ளவும் துணை புரிகின்றது. அவ்வகைப் பண்புள்ள பாடல்கள் சிலம்பில் இடம் பெற்றிருப்பதை,

"பவள உலக்கை கையால் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை அல்ல கொடிய கொடிய" (சில. 7. பா. 10)

கானல் வரிப்பாடல் விளக்கி நிற்கின்றது. இதுபோலவே குன்றக் குரவைப் பாடல்களும், ஆய்ச்சியர் குரவைப் பாடல்களும் இல்லமைப்பைப் பெற்றுள்ளன. மேலும், அம்மானை, ஊசல் ஆடும் மகளிர் பாடும் அம்மானை வரி, கந்துக வரி, ஊசல்வரி பாடல்கள் வாழ்த்துக் காதையில் இடம் பெற்றுள்ளன நாடு காண் காதையில் உழத்தியர் பாடும் பாடல்கள் நாட்டுப்புறத் தொழில் பாடல்களைக் குறிப்பிடும் வண்ணம் அமைந்துள்ளன.

அதோடு நாட்டுப்புற மக்களின் கடவுள் வழிபாடு சிலம்பில் சித்திரிக்கப்பட்டுள்ளது. வேட்டுவ வரியில் சாலினி தெய்வமேறப்பட்டு ஆடிக் கொற்றவைக்கு உரிய கடனைத் தரப் பணிக்கிறாள். இதனை தெய்வ கட்டளையாக ஏற்ற வேட்டுவர் தங்குல மக்கள் ஒருத்திக்குக் கொற்றவைக் கோலம் புனைந்து கலைமான் மேல் ஏற்றிப் பலிக் கொடை செய்து வழிபடுகின்றனர். இவ்வாறே ஆய மகளிர் தீயகுறி கண்டு தீயவினை நீங்கக் குரவைக் கூத்து ஆடி மாயவனை வழிபடுகின்றனர். குறிஞ்சி நில மக்களாகிய குன்றக் குரவையர் தாம் விரும்பிய கணவனைப் பெற குரவை பாட்டு பாடியும் ஆடியும் வேலனை வழிபடுகின்றனர். மேலும் தாம் விரும்பியதைப் பெற பத்தினியையும் கடவுளாக வழிபட்டனர்.

நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளும் சிலம்பில் இருப்பதை "கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்" (சில. 5. 236) என்ற வரிகள் கண் துடித்தல் பற்றிய நம்பிக்கையை எடுத்தியம்புகின்றது. சகுனம் பார்க்கும் பழக்கமும் இருந்ததை சிலம்பு எடுத்துக் காட்டுகின்றது. குடத்துப்பால் உறையாமை, கன்று துள்ளி ஆடாமை, விடை ஏற்றின் கண்ணில் நீர் நிறைதல், இறில் ஏறு எதிர்ப்படல் போன்றவை ஆயர் சமூகத்தில் தீய நிமித்தமாக கருதப்பட்டது. ஆயர் மகளிர் காளையை வளர்த்து அக்காளையை அடக்குபவர்களைத் திருமணம் செய்யும் வழக்கத்தையும் சிலம்பு எடுத்தியம்புகின்றது.

## சிலம்பில் கதை மாந்தர் பண்பு நலன்

சிலம்பில் கதை மாந்தர்களுடைய பண்புகளைக் காணும் போது சோழ நாட்டில் கண்ணகியின் தோழி தேவந்தி முதல் மாதவியின் தோழி வயந்தமாலை வரை ஒவ்வொருவரும் நட்பிற்கு இலக்கணம் வகுத்தவர்களாக இருந்தனர். மதுரைக்குக் கண்ணகியையும் கோவலனையும் அழைத்துச் செல்லும் கவுந்தியடிகள் ஒரு சமண துறவியாக இருப்பினும் பாசத்துடன் இருவரையும் வழிநடத்திச் சென்றார். மதுரையில் அடைக்கலமாக சென்ற மாதரியும் அவளது மகள் ஐயையும் உண்மையான பண்பு நலன்களுடன் கோவலனுக்கும் கண்ணகிக்கும் உதவினர். கோவலன் உயிர் மாண்ட செய்தி கேட்டவுடன் கண்ணகி நிலையை எண்ணி மனம் தாங்காமல் தன் உயிரையே மாய்த்துக் கொண்டாள் மாதரி. சேர நாட்டிற்குச் சென்ற கண்ணகியின் நிலை கண்ட குன்றக் குரவை பிற நாட்டவள் என்று கருதாது கண்ணகியைப் பத்தினி தெய்வமாகப் போற்றினர். இப்படி ஒவ்வொரு நிலையிலும் மனதை வருடக்கூடிய கதை மாந்தர்களை சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் வடித்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில், ஆடல், பாடல், கலை, தொழில் சிறப்பு, இயற்கைச் சிறப்பு நாடகப்பாங்கு, இசை நுணுக்கம், திணை அமைப்பு ஆகியவை சிறப்புற அமைந்துள்ளன. ஆய்வு எல்லை கருதி ஒரு சில சிறப்புக்களை மட்டும் இக்கட்டுரையில் எடுத்தியம்பப்பட்டுள்ளன. ஆக சிலப்பதிகாரம் சிறந்த செவ்வியல் பண்புகளைக் கொண்ட இலக்கியமாக இருப்பதால் அவற்றை படித்து பயன் பெறுவோம். வாழ்க வளமுடன் வாழ்க வையகம்.

**துணை நின்ற நூல்கள்**

1. சிலப்பதிகாரம்
2. திருக்குறள்
3. தனிப்பாடல் திரட்டு
4. நெஞ்சை அள்ளும் சிலம்பு
5. சிலப்பதிகாரம் காட்டும் அரசியல்
6. தமிழும் உலக செம்மொழிகளும்
7. கம்பராமாயணம்
8. சிந்தனையாளர் அரிஸ்டாட்டில்